தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, மே 9, வெள்ளிக்கிழமை.

சித்திரை 26, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல் ''

சொல்லும்போது கேட்டவரைத் தன்வயப்படுத்தும் பண்புகளுடன் கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப்படுவது சொல்வன்மையாகும்.

1. வினாக்கள் —விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

குடந்தை காரனேஷன் மருத்துவமனை.

686—(*வினா எண் 5692) திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தை நகராட்சியால் நிர்வகிக்கப்படும் ''காரனேஷன் மெட்டர்னிடி ஹாஸ்பிடல்'' என்ற மகப்பேறு மருத்துவ மனையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பெண் டாக்டர்கள் எவருமே இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) மற்றும் (ஆ) கும்பகோணம் நகராட்சியைச் சேர்ந்த காரனேஷன் மருத்துவமனையில் பணிபுரிந்து வந்த பெண் மருத்துவ அலுவலர் டாக்டர் ராஜம் 1983-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ஆம் நாள் முதல் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். தாய்சேய் நல விடுதி மருத்துவ அலுவலர் டாக்டர் சாவி மகானி அந்தப் பதவிக்கான பொறுப்புக்களைக் கவனித்து வந்தார். 1986-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 22-ஆம் நாளன்று புதிய மருத்துவ அலுவலர் டாக்டர் ஹெபிஷா பீ அந்தப் பதவியின் பொறுப்பேற்று பணியாற்றி வருகிறார்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியால் நடத்தப்படும் இப்படிப்பட்ட 'மெட்டர்னிட்டி ஹாஸ்பிடல்களை' அரசாங்கம எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: — பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் கொள்கைகளை பற்றி கேட்கக் கூடாது என்ற மரபு இருக்கிறது. எனவே அதைப்பற்றி நான் சொல்வதற்கு ஒன்றும் இல்லை.

கோவை நகரில் சிமெண்ட் சிலாப்புகள் பதித்தல்

687—(*வினா எண் 8254) திரு. மு. இராமநாதன் மற்றும் திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரத்திலுள்ள எல்லா வார்டுகளிலும் சந்துகளுக்கு சிமெண்ட் சிலாப் போடுவது உட்பட பழுது பார்க்கும் பணிகள் அனைத்தும் செயலிழந்து நகரம் சுகாதாரக் கேடாக இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) இந்தப் பணிகளை நிறைவேற்றிட மாநகராட்சியிடப் நிதி இல்லை என்பது உண்மையா ?

(இ) தெருக்களைப் பழுதுபார்க்கக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) கோவை மாநகரத்தில் அனைத்துப் பகுதிகளும் பார்வையிடப்பட்டு, தேவைப்படும சந்துகளில் சிலாப் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளிலும் ஸ்தல ஆய்வுகள் மற்றும் பொதுமக்கள் முறையீட்டின் பேரிலும் அவசியமான இடங்களில் சுகாதார நலன் கருதி சிமெண்ட் சிலாப் அமைக்கப்பட்டு, கோவை மாநகராட்சி சுகாதாரத்துடன் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) மாநகராட்சியிடம் இப்பணிகளுக்கு உரிய நிதி வசதி உள்ளது.

(இ) தேவைப்படும்போது மாநகராட்சியின் கோரிக்கைக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தவறாக எண்ணிக் கொள்ளக் கூடாது. எல்லாச் சந்துகளும் பார்வையிடப்பட்டு சிமெண்ட் சிலாப் போடப்பட்டு இருக்கிறது என்று ஒருவேளை அதிகாரிகள் கொடுத்த குறிப்பை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் படிக்